[29th October 1958

THE HON. SRI M. A. MANICKAVELU: அப்படி செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

SRI T. KARIA GOUNDER: கனம் அமைச்சர் அவர்கள் வடார்காடு ஜில்லாவில் நிர்வாகத்துறையில் அதிகமான வேலை இல்லை என்று சொன்னார்கள். அதற்கு காரணம் என்ன என்பதை விளக்குவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர் போன்ற ஜில்லாக்களை எடுத்து ஒப்பிட்டுப்பார்த்தால் வடார்காடு ஜில்லாவில் அவ்வளவு அதிகமான வேலை கிடையாது என்ற நினைப்பில் தான் அவ்விதம் தெரிவித்தேன்.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, ஜில்லாக்களை இரண்டாக பிரிப்பது என்ற கொள்கையை எடுத்துக்கொள்ளும்போது இப்போது ஒன்றிரண்டு ஜில்லாக்களை மட்டும் பிரிவு செய்யவேண்டும் என்பதை மாற்றி பொதுவாக எல்லா ஜில்லாக்களையுமே மாற்றி அமைக்க வேண்டிய ஆலோசனை செய்து அதற்கான தக்க ஒரு கொள்கையை கொண்டு வர அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இப்போது அரசாங்கம் முன் வந்திருப்பது இப்போது இருக்கின்ற சில ஜில்லாக்களில் இரண்டாகப் பிரிவு செய்யவேண்டும் என்பதுதான். ஒவ்வொரு ஜில்லாக்களையும் எடுத்து பிரிவு செய்யவேண்டும் என்றால் இன்னும் அதிகமான தொந்தரவு தான் ஏற்படும் என்று நினைக்கிறேன்.

Harijan Welfare Schools

*690 Q.—SRI M. C. MUTHUKUMARASWAMY: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரசபை எல்லைக்குள் எத்தனை ஹரிஜன நலப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன ?

(ஆ) அவைகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள், ஆசிரியைகள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் கிருஸ்தவர்கள், பிற்பட்ட வகுப்பினர், ஹரிஜன வகுப்பினர் எத்தனை பேர் ?

THE HON. SRI P. KAKKAN: (a) Five.

(b) Male teachers	15
Female teachers	37
(c) Christian Harijan Converts	20
Non-Harijan Converts	7
Backward and Other Communities ..	9
Harijans	16
Total ..	52

SRI M. C. MUTHUKUMARASWAMY: ஸார், இந்த ஹரிஜன வெல்பெயர் டிப்பார்ட்மெண்டு என்று மாற்றுவதற்கு முன்னால் லேபர் டிப்பார்டுமெண்ட் என்ற பெயர் இருந்தது. எல்லாதுறைகளிலும் ஹரிஜனங்கள் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த துறை ஏற்படுத்தப்பட்டது. அந்நோக்கம் நிறைவேறுமுன் மேற்படி துறையில் மற்ற சமூகத்தினர்களைப் புகுத்துவது என்?

29th October 1958]

THE HON. SRI P. KAKKAN : முன்பு லேபர் டிப்பார்டுமெண்ட் என்றிருந்து செய்துகொண்டிருந்த வேலையைவிடவும் அதிகப்படியான வேலைகளை செய்வதற்குத்தான் ஹரிஜன வெல்பேர் டிப்பார்ட்மெண்ட் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எங்கு எல்லாம் ஹரிஜன ஆசிரியர்கள் கிடைக்கவில்லையோ அங்கெல்லாம் மற்ற சமூகத்திலுள்ளவர்களை நியமித்து வருகிறார்கள். ஹரிஜனங்களுக்கு வேலை செய்வதற்கு பலர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே மற்ற சமூகத்தினர்களையும் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு வருகிறது.

SRI K. VINAYAKAM : ஹரிஜனங்களை மாத்திரம்தான் நியமிக்க வேண்டும் என்றிருக்கிற இடத்தில் மற்ற சமூகத்தினர்களையும் நியமித்தால் ஒருவரோடு ஒருவர் பரஸ்பரம் நட்புறவு ஏற்படுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே அதை உத்தேசித்து ஜாதி அடிப்படை என்றில்லாமல் ஹரிஜனங்களையும் மற்ற சமூகத்தினர்களையும் சேர்த்து நியமிப்பதற்கு சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லும் யோசனையை ஏற்றுக்கொள்ள முடியாது. உண்மையாகவே குழந்தைகளுக்கு நல்ல முறையில் யார் கற்பித்துக்கொடுக்கிறார்களோ அவர்களைப் பார்த்து நியமிக்கப்படுகிறதே ஒழிய ஜாதி அடிப்படையில் மாத்திரம் நியமிக்கப்படுவதில்லை.

Acquisition of house-sites in Reddipalayam

* 691 Q.—SRI S. M. ANNAMALAI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any mahazar from the villagers of Reddipalayam, Polur taluk, for acquisition of house-sites has been received recently; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN (a) Yes, Sir.

(b) The remarks of the Collector of North Arcot have been called for on the requests contained in the mahajar.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த ரெட்டிபாளையம் ஒரு சிறு கிராமம். அங்கு ஒரு வீட்டில் பத்து முதல் பதினைந்து குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். பக்கத்தில் நில சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். பக்கத்தில் கால்வாயும் ஓடுகிறது. இவர்களுக்கு வேண்டிய இடம் கேட்டால் அதுவும் கொடுக்கமாட்டோம் என்கிறார்கள். இதன் பேரில் மூன்று மகஜர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அதன் பேரில் உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இதைப்பற்றி நான் முன்பு சொன்னேன். கலெக்டர் அவர்களிடத்தில் இதைப்பற்றி ரிப்போர்ட் கேட்கப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன் இதில் வேண்டிய முடிவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

Statistics about Schools and Colleges

* 692 Q.—SRI N. R. THIAGARAJAN and SRI K. GOPALA KOUNDER : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்தில் தற்போதிய ஜில்லாக்களில் 1946-ல் ஆரம்பப் பள்ளிகள் எத்தனை, அதில் படித்த மாணவர் தொகை என்ன ?

(ஆ) உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை, அவைகளில் படித்த மாணவர் தொகை என்ன ?